

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தணிக்கைத் துறைகளில் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர், உதவி ஆய்வாளர் மற்றும் உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 780 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்) எஸ். நாகராஜன், தலைமை தணிக்கை இயக்குநர் ஜி.கே.அருண் சுந்தர் தயாளன், கூட்டுறவு தணிக்கைத்துறை இயக்குநர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் “வேர்களைத் தேடி” திட்டத்தின் கீழ், தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை. பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 1.08.2024 அன்று முதல் 15.08.2024 வரையிலான தமிழக சுற்றுப் பயணத்திற்கு துணிமணிகள், பயண குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை போன்ற பயணத்திற்கான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ் மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை இணைச் செயலாளர் பா.விஷ்ணு சந்திரன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





திருச்சி மாவட்டம் பச்சைமலையில் உள்ள தென்புறநாடு ஊராட்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியின் போது, கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் வீடுகள் – கறவை மாடுகள் – வீட்டு மனைப் பட்டாக்கள் – பேருந்து சேவைகள் – மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி கடன் இணைப்புகள் என 1900 பயனாளிகளுக்கு ரூ.6.60 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, உழவர் சந்தை, பச்சை மலையை ஊராட்சி ஒன்றியம் ஆக்குவது, மலை கிராமங்களுக்கு இடையே சாலை மேம்பாடு , அரசு கல்லூரி மற்றும் பல்வேறு அடிப்படை கட்டமைப்புகள் சார்ந்த கோரிக்கைகளை மலை கிராம மக்கள் முன்வைத்தனர். அவற்றின் அடிப்படையில், ரூ.14 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி கட்டிடம், 3 லட்சம் ரூபாய் மதிப்பில் விவசாயத்துக்கு தேவையான குடிநீர் திட்ட வசதிகள் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்கு உடனடியாக ஆணையிடப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார். இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, சா.சி.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அருண் நேரு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### நிதித்துறை கட்டுப்பாட்டில் உள்ள தணிக்கைத் துறைகளுக்குத் தேர்வான

# 780 தணிக்கையாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.3-

நிதித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தணிக்கைத் துறைகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 780 தணிக்கை யாளர் பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தணிக்கைத்துறைகளில் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர், உதவி ஆய்வாளர் மற்றும் உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 780 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு தணிக்கைத் துறையில் 7 கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் பணியிடங்களும், 928 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களில் முதற்கட்ட மாக 700 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களும், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் 43 உதவி ஆய்வாளர்கள் பணியிடங்களும் மற்றும் இந்து சமய அறநிலைய நிறுவனங்களின் தணிக்கைத் துறையில் 30 உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களும் என மொத்தம் 780 பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இளநிலை கூட்டுறவுத் தணிக்கையாளரின் முக்கிய பணி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உள்ளிட்ட அனைத்து கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை தணிக்கை செய்தல், வரவினமாக உள்ள கடன், அசல், வட்டி போன்ற இனங்கள் உரிய முறையில் வரவு வைக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்வ தாகவும்.

இந்து சமய அறநிலைய நிறுவனங்களின் தணிக்கை ஆய்வாளர் பணியானது, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அறநிலைய நிறுவனங்களின் பொது கணக்கு, அன்னதான கணக்கு, திருப்பணி மற்றும் இதர வரவுசெலவு கணக்குகள் மீது தணிக்கை மேற்கொண்டு இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்குட்பட்டு வரவுசெலவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுதி செய்வதாகும்.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் உதவி ஆய்வாளர் பணியானது, உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா என்பதையும், வரவு செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதையும் உறுதி செய்தல், அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி வழங்கப்பட்ட காரணங்களுக்காக முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதாகும்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள தணிக்கையாளர்களுக்கு சென்னை, மதுரை, கோவை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களில் தணிக்கைப்பணி தொடர்பான முழுமையான பயிற்சி வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்)

எஸ். நாகராஜன், தலைமை தணிக்கை இயக்குநர் ஜி.கே.அருண் சுந்தர் தயாளன், கூட்டுறவு தணிக்கைத் துறை இயக்குநர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இலங்கைக் கடற்படையின் படகு மோதி விபத்து!

# உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக. 3 -

இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில் உயிரிழந்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மூக்கையா (வயது 54), முத்துமுனியாண்டி (வயது 57), மலைச்சாமி (வயது 59) மற்றும் இராமச்சந்திரன் (வயது 64) ஆகிய நால்வரும் நேற்று முன்தினம் (01.08.2024) அதிகாலை இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப்படகில் சென்று நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில், மீன்பிடி விசைப்படகு சேதமடைந்து நீரில் மூழ்கியதில் மலைச்சாமி (வயது 59) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், அந்த விசைப்படகில் சென்ற இரண்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அழைத்துச் சென்றதாகத் தெரியவருகிறது. மேலும், மற்றொரு மீனவர் தேடப்பட்டு வருகிறார். தமிழ்நாடு அரசு தொடர்ந்து பலமுறை கடிதம் மூலமாகவும், நேரிலும் ஒன்றிய அரசை வலியுறுத்தியும் உரிய தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாததால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும் இதுபோன்ற விலைமதிப்பில்லா உயிரிழப்புகளும் நேர்கின்றது. இச்சம்ப வத்தை ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசு தக்க முறையில் எடுத்துச் செல்லும்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த மலைச்சாமி அவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவருடைய குடும்பத்தினருக்கு பத்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

### சின்னசேலம் வடக்கு ஒன்றியம்

# தகரையில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம்!

## உதயசூரியன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கள்ளக்குறிச்சி,ஆக. 3-

கள்ளக்குறிச்சி மாவட்டம்,சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி, சின்னசேலம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட தகரை கிராமத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது.

இந்த முகாமிற்கு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தலைமை தாங்கினார், சின்னசேலம் தாசில்தார் மனோஜ் முனியன், வட்டார வளர்ச்சி அலுவலர் ரவிசங்கர், சமூக பாதுகாப்பு திட்ட அலுவலர் குப்புசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்,சின்னசேலம் ஒன்றிய துணை சேர்மன், வடக்கு ஒன்றிய கழக செயலாளர், V.V.அன்புமணி மாறன் முகாமிற்கு வந்த அனைவரையும்வரவேற்றார்.

முகாமில் தகரை, கல்லாநத்தம், திம்மாபுரம், பாண்டிங்குப்பம், நாகுப்பம், வெட்டி பெருமாளகரம், தென்செட்டியந்தல் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டவர்கள் உதயசூரியன் எம்.எல்.ஏ.விடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்,

மேலும் இந்த கோரிக்கை மனுக்களை அதிகாரிகள் கணினியில் பதிந்து உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள் என்று பொதுமக்களிடம் கூறினார்.இதன் பின்னர் 15 பேருக்கு ரேஷன் கார்டு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்,முகாமிற்கு வந்த பொதுமக்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.


இதில் மாவட்ட கவுன்சிலர் வேலு, ஒன்றிய கவுன்சிலர்கள் நந்தினி மோகன், திவ்யபாரதி கோம்பையன், ஊராட்சி மன்ற தலைவர்கள் சண்முகம், ஆசைமுத்து, கோகிலா பெரியான், தென்னரசி பாண்டியன், சுலோச்சனா கண்ணன், அமுதா பவுன்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்,தகரை ஊராட்சி மன்ற தலைவர் நீலாவதி நிகழ்ச்சியின் முடிவில் நன்றி கூறினார்.



ஒன்றிய அரசு புதுச்சேரிக்கு சிறப்பு நிதி ஒதுக்காததை கண்டித்தும், கடந்த பட்ஜெட்டில் அறிவித்த திட்டங்களை நிறைவேற்றாதது, துறைமுகம் விரிவாக்கம், விமான நிலைய விரிவாக்கம், நியாயவிலைக் கடைகள் திறக்காதது, மின்துறை தனியார் மயம் உள்ளிட்ட பல்வேறு மக்கள் பிரச்சினைகளுக்காக ஆளுநர் உரையைக் கண்டித்து சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் இரா. சிவா தலைமையில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.எச். நாஜிம், வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல்.சம்பத், நாக.தியாகராஜன், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் மு. வைத்தியநாதன், ரமேஷ் பரம்பத் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.வி. நடராசன்
### ஆகஸ்ட் 3 (1975)



சென்னை மாவட்டக் கழகத்தின் முதலாம் செயலாளர். கழகச் சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கு அமைக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக்குழுவின் முதல் செயலாளர், கழகத்தின் முதல் அமைப்புச் செயலாளர் மற்றும் தி.மு.கழகத்தில் மிக நீண்டகாலம் தலைமை நிலையச் செயலாளராக இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்.

அதுமட்டுமல்லாமல், கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுமை என்ற புகழ் பெற்ற ‘பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை’ அமைந்தபோது, அதன் அமைச்சராக முதலில் பதவி வகித்தவரும் இவர்தான்.

‘திராவிடன்’ என்ற இதழை துவக்கி கழகத்தின் போர்முரசமாய் அதை நடத்தி வந்தார்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் “நமது தி.மு.கழக மாலடோவ் என்.வி.என்” என பெருமைப்படக்கூறியது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**